ආරම්භය: 1930 ලි.ප. අංකය: 736
ஆரம்பம்: 1930 பதிவு இல: 736
Inception: 1930 Reg. No: 736

வரையறுக்கப்பட்ட கல்விச் சேவை ஊழியர்களின் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் வழங்கும் சங்கம் என்பது , நாட்டின் கல்விச் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களின் உறுப்புரிமையைக் கொண்டு உருவாக்கப்பட்டு , கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட , சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் செயற்படும் ஒரு கூட்டுறவுச் சங்கமாகும்.

சங்கத்தின் பிரதான காரியாலயம் மற்றும் கிளைக் காரியாலயங்களில் நிலவும் பின்வரும் வெற்றிடங்களுக்கு நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்காக வெளி விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர்கள் பின்வரும் பொதுவான நிபந்தனைகளுக்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2026-09-19ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலிலோ அல்லது பிரதான தலைவருக்குக் கிடைக்கும் வகையில் நேரடியாகவோ கொண்டுவந்து கையளிக்க வேண்டும் . மேலும், இந்த அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள QR குறியீட்டைப் பயன்படுத்தி இணையவழியிலும் (Online) விண்ணப்பித்திருக்க வேண்டும். (QR குறியீட்டைப் பயன்படுத்தி இணையவழியில் மட்டும் விண்ணப்பிப்பது போதுமானதல்ல.)

(கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்கள் தவிர்த்து நாட்டின் ஏனைய அனைத்து மாவட்டங்களின் பிரதான நகரங்களிலும் சங்கத்தின் கிளைக் காரியாலயங்கள் அமைந்துள்ளன.)

இதற்காகத்திறமையான,
உற்சாகமானமற்றும்அர்ப்பணிப்புடன்பணியாற்றக்கூடியதகுதியானவர்களிடமிருந்துவிண்ணப்பங்கள்கோரப்படுகின்றன.

## பிரதான தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்(நிறைவேற்றுச் சேவைப் பிரிவு

1. கணினி விஞ்ஞானம் தொடர்பான முதுகலைமாணிப் பட்டத்துடன் (Postgraduate degree), தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் நிறைவேற்று மட்டப் பதவியில் 02 வருட முன்அனுபவம்.

**அல்லது**

2. கணினி விஞ்ஞானம் தொடர்பான பட்டத்துடன் (Degree), தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் நிறைவேற்று மட்டப் பதவியில் 04 வருட முன்அனுபவம்.

**சம்பள அளவுத்திட்டம் :** மாதாந்தம் 57,400 - 1,200 X 10

**வெற்றிடங்களின் எண்ணிக்கை - 01**

## பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்(நிறைவேற்றுச் சேவைப் பிரிவு E.2 - தரம்

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் கணக்கீடு , வியாபார முகாமைத்துவம் , வர்த்தகம் ஆகிய துறைகளில் முதுகலைமாணிப் பட்டத்துடன் , அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் கணக்கீடு /கணக்காய்வுத் துறையில் நிறைவேற்றுப் பதவியில் 02 வருட முன்அனுபவம்.

**அல்லது**

2. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் கணக்கீடு , வியாபார முகாமைத்துவம் , வர்த்தகம் ஆகிய துறைகளில் பட்டத்துடன் , அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் கணக்கீடு/கணக்காய்வுத் துறையில் நிறைவேற்றுப் பதவியில் 04 வருட முன்அனுபவம்.

**அல்லது**

3. இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின் அல்லது உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் 04 வருட கணக்கீடு /வர்த்தக டிப்ளோமாவுடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் கணக்கீடு /கணக்காய்வுத் துறையில் நிறைவேற்றுப் பதவியில் 05 வருட முன்அனுபவம்.

**அல்லது**

4. இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் இரண்டாவது கட்டத்தில் சித்தியெய்தியிருத்தல் அல்லது பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் இறுதி கட்டத்தில் சித்தியெய்தியிருத்தலுடன் , அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் கணக்கீடு/கணக்காய்வுத் துறையில் நிறைவேற்றுப் பதவியில் 05 வருட முன்அனுபவம்.

**சம்பள அளவுத்திட்டம் :**மாதாந்தம் 57,400 - 1,200 X 10

**வெற்றிடங்களின் எண்ணிக்கை - 01**

## முகாமையாளர் (நிறைவேற்றுச் சேவைப் பிரிவு E.3.1 - தரம் III)

**1.** அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெறப்பட்ட நிதி /வியாபார நிர்வாகம்/வியாபார முகாமைத்துவம் /கணக்கீடு/வங்கியியல்/வர்த்தகம் தொடர்பான பட்டத்துடன், நிறைவேற்று மட்டப் பதவியில் 03 வருட முன்அனுபவம்.

**அல்லது**

2. க.பொ.த. உயர்தரச் சித்தியுடன் , அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் வியாபார நிர்வாகம்/வியாபார முகாமைத்துவம் /கணக்கீடு/வர்த்தகம் தொடர்பில் ஒரு வருடத்திற்குக் குறையாத டிப்ளோமா நெறியொன்றில் சித்தியெய்தியிருத்தலுடன் , தொடர்புடைய துறையில் நிறைவேற்று மட்டத்தில் 05 வருட முன்அனுபவம்.

**அல்லது**

3. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெறப்பட்ட வியாபார நிர்வாகம்/வியாபார முகாமைத்துவம் /கணக்கீடு/வர்த்தகம் தொடர்பான பட்டத்துடன் , ஆட்சேர்ப்புச் செய்யும் கூட்டுறவுச் சங்கம் /ஒன்றியத்தின் பதவியணி உத்தியோகத்தர் (Staff Officer) பதவியில் 05 வருட முன்அனுபவம்.

**அல்லது**

4. க.பொ.த. உயர்தரச் சித்தியுடன் , அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் வியாபார நிர்வாகம்/வியாபார முகாமைத்துவம் /கணக்கீடு/வங்கியியல் தொடர்பில் ஒரு வருடத்திற்குக் குறையாத டிப்ளோமா நெறியொன்றில் சித்தியெய்தியிருத்தலுடன் , ஆட்சேர்ப்புச் செய்யும் கூட்டுறவுச் சங்கம் /ஒன்றியத்தின் பதவியணி உத்தியோகத்தர் பதவியில் 07 வருட முன்அனுபவம்.

**சம்பள அளவுத்திட்டம் :**மாதாந்தம் 50,600 - 900 X 10

**வெற்றிடங்களின்எண்ணிக்கை - 14**

## சட்ட உத்தியோகத்தர் (நிறைவேற்றுச் சேவைப் பிரிவு E.3.2 - தரம் III)

1. 03 வருட முன்அனுபவத்துடன் இலங்கை உயர்நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்த ஒரு சட்டத்தரணியாக இருத்தல்.

**சம்பள அளவுத்திட்டம் :**மாதாந்தம் 48,400 - 720 X 10

**வெற்றிடங்களின் எண்ணிக்கை - 01**

## நிர்வாக உத்தியோகத்தர் (நிறைவேற்றுச் சேவைப் பிரிவு E.3.2 - தரம் III)

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் மனித வள முகாமைத்துவம் அல்லது நிர்வாகம் தொடர்பான பட்டத்துடன் , மனித வள முகாமைத்துவம் அல்லது நிறுவன நிர்வாகம் தொடர்பில் முகாமைத்துவ மட்டப் பதவியில் 03 வருட முன்அனுபவம்.

**அல்லது**

2. க.பொ.த. உயர்தரச் சித்தியுடன் , அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் உரிய துறை தொடர்பில் ஒரு வருடத்திற்குக் குறையாத மனித வள முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமா நெறியொன்றில் சித்தியெய்தியிருத்தலுடன், மனித வள முகாமைத்துவம் அல்லது நிறுவன நிர்வாகம் தொடர்பில் முகாமைத்துவ மட்டப் பதவியில் 05 வருட முன்அனுபவம்.

**அல்லது**

3. மேற்குறிப்பிட்ட 1, 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி மற்றும் தொழில்சார் தகுதிகளில் ஒன்றுடன், ஆட்சேர்ப்புச் செய்யும் கூட்டுறவுச் சங்கம் /ஒன்றியத்தின் பதவியணித் தரத்திலான பதவியில் 10 வருட முன்அனுபவம் மற்றும் சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தல்.

**அல்லது**

4. மேற்குறிப்பிட்ட 1, 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி மற்றும் தொழில்சார் தகுதிகளில் ஒன்றுடன், ஆட்சேர்ப்புச் செய்யும் கூட்டுறவுச் சங்கம் /ஒன்றியத்தின் தொழிற்பாட்டுச் சேவைத் தொகுதியின் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் / முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் (கணக்கு)/ கணக்காய்வு உதவியாளர் பதவியில் 15 வருட முன்அனுபவம் மற்றும் சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தல்.

**சம்பள அளவுத்திட்டம் :**மாதாந்தம் 48,400 - 720 X 10

**வெற்றிடங்களின்எண்ணிக்கை–04**

## <u>தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (நிறைவேற்றுச் சேவைப் பிரிவு E.3.2 -</u>

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பட்டத்துடன், தகவல் தொழில்நுட்பத் துறையில் நிறைவேற்றுப் பதவியில் 02 வருட முன்அனுபவம்.

**அல்லது**

2. க.பொ.த. உயர்தரச் சித்தியுடன், அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் தகவல் தொழில்நுட்பம் தொடர்பில் ஒரு வருடத்திற்குக் குறையாத டிப்ளோமா நெறியொன்றில் சித்தியெய்தியிருத்தலுடன், தகவல் தொழில்நுட்பத் துறையில் 05 வருட முன்அனுபவம்.

**சம்பள அளவுத்திட்டம் :** மாதாந்தம் 48,400 - 720 X 10

**வெற்றிடங்களின் எண்ணிக்கை - 02**

## <u>உதவி முகாமையாளர் (நிறைவேற்றுச் சேவைப் பிரிவு E.3.2 - தரம் III)</u>

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெறப்பட்ட வியாபார நிர்வாகம் / வியாபார முகாமைத்துவம் / நிதி முகாமைத்துவம் / கணக்கீடு/ வங்கியியல்/ வர்த்தகம் தொடர்பான பட்டத்துடன் , தொடர்புடைய துறையில் முகாமைத்துவ மட்டப் பதவியில் 02 வருட முன்அனுபவம்.

**அல்லது**

2. க.பொ.த. உயர்தரச் சித்தியுடன் , அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் வியாபார நிர்வாகம்/ வியாபார முகாமைத்துவம் / நிதி முகாமைத்துவம் / கணக்கீடு/ வங்கியியல்/ வர்த்தகம் தொடர்பில் ஒரு வருடத்திற்குக் குறையாத டிப்ளோமா நெறியொன்றில் சித்தியெய்தியிருத்தலுடன், தொடர்புடைய துறையில் முகாமைத்துவ மட்டப் பதவியில் 05 வருட முன்அனுபவம்.

**அல்லது**

3. மேற்குறிப்பிட்ட 1, 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி மற்றும் தொழில்சார் தகுதிகளில் ஒன்றுடன், ஆட்சேர்ப்புச் செய்யும் கூட்டுறவுச் சங்கம் /ஒன்றியத்தின் தொடர்புடைய துறையில் பதவியணிச் சேவைத் தொகுதியின் பதவியில் 10 வருட முன்அனுபவம் மற்றும் சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தல்.

**அல்லது**

4. மேற்குறிப்பிட்ட 1, 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி மற்றும் தொழில்சார் தகுதிகளில் ஒன்றுடன், ஆட்சேர்ப்புச் செய்யும் கூட்டுறவுச் சங்கம் /ஒன்றியத்தின் தொடர்புடைய துறையில் தொழிற்பாட்டுச் சேவைத் தொகுதியின் பதவியில் 15 வருட முன்அனுபவம் மற்றும் சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தல்.

**சம்பள அளவுத்திட்டம் :**மாதாந்தம் 48,400 - 720 X 10

**வெற்றிடங்களின் எண்ணிக்கை - 19**

## உதவிக் கணக்காளர் (நிறைவேற்றுச் சேவைப் பிரிவு E.3.2 - தரம் III)

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் வர்த்தகம் / நிதி முகாமைத்துவம் / கணக்கீடு ஆகிய துறைகளில் பட்டத்துடன் , கணக்கீட்டுத் துறையில் நிறைவேற்று மட்டப் பதவியில் 02 வருட முன்அனுபவம்.

**அல்லது**

2. இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின் அல்லது உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் 04 வருட கணக்கீடு டிப்ளோமா நெறியுடன் கணக்கீடு / வர்த்தகத் துறையில் நிறைவேற்று மட்டப் பதவியில் 02 வருட முன்அனுபவம்.

**அல்லது**

3. பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் இரண்டாவது கட்டத்தில் சித்தியெய்தியிருத்தல் அல்லது பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் இரண்டாவது கட்டத்தில் சித்தியெய்தியிருத்தலுடன், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் கணக்கீட்டுத் துறையில் நிறைவேற்று மட்டப் பதவியில் 02 வருட முன்அனுபவம்.

**அல்லது**

4. கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் நிறுவனத்தின் (AAT) மூன்றாவது கட்டத்தில் சித்தியெய்தியிருத்தலுடன், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் கணக்கீட்டுத் துறையில் நிறைவேற்று மட்டப் பதவியில் 05 வருட முன்அனுபவம்.

**அல்லது**

5. மேற்குறிப்பிட்ட 1, 2, 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி மற்றும் தொழில்சார் தகுதிகளில் ஒன்றுடன், ஆட்சேர்ப்புச் செய்யும் கூட்டுறவுச் சங்கம் /ஒன்றியத்தின் பதவியணித் தரத்திலான பதவியில் 07 வருட முன்அனுபவம் மற்றும் சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தல்.

**சம்பள அளவுத்திட்டம் :**மாதாந்தம் 48,400 - 720 X 10

**வெற்றிடங்களின் எண்ணிக்கை - 23**

**பொது நிபந்தனைகள்**

- விண்ணப்பதாரர்கள் 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். ஆயினும், தற்போது கூட்டுறவுச் சேவையில் ஈடுபட்டுள்ள ஒருவருக்கு இந்த உச்ச வயது வரம்பு பொருந்தாது.
- மேற்குறிப்பிட்ட பதவிக்கான மாதாந்த சம்பளத்திற்கு மேலதிகமாக ரூ . 17,800/- வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவும் , அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட ரூ. 11,000/- கொடுப்பனவும் உரித்தாகும்.
- இப்பதவி நிரந்தரமானது . ஆனால் ஓய்வூதியமற்றது . நியமனம் பெறுபவர் ஊழியர் சேமலாப நிதியத்திற்காக 10% செலுத்த வேண்டும் என்பதுடன், நிறுவனத்தால் 15% வரவு வைக்கப்படும்.
- விண்ணப்பதாரர்கள் சுயவிவரங்கள் மற்றும் அனைத்து கல்வி மற்றும் தொழில்சார் தகுதிகளையும் உள்ளடக்கி , தம்மால் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட சுயவிவரக் கோவையுடன் (CV), இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தையும் பூர்த்தி செய்து விண்ணப்பிக்க வேண்டும்.

## வரையறுக்கப்பட்ட கல்விச் சேவை ஊழியர்களின் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் வழங்கும் சங்கம்

**.......................................................................................................... பதவிக்கான விண்ணப்பம்**

1. விண்ணப்பதாரரின் முழுப் பெயர்:- ............................................................................
2. முதலெழுத்துக்களுடன் பெயர்:- ……….........………....................................................
3. நிரந்தர முகவரி :- ……….........………..................................................................
4. நிரந்தரமாகவசிக்கும்மாவட்டம்:-.......................................................................
5. பிறந்த திகதி : - ................/................/...............
6. வயது:- வருடம்................. மாதங்கள் ................ நாட்கள் ..........................
7. தேசிய அடையாள அட்டை இலக்கம் : - ..................................................................
8. ஆண் / பெண் : - ..........................
9. விவாகமானவரா/விவாகமாகாதவரா : - .......................

10.தொலைபேசி இலக்கம் : - ..........................11. Whatsappஇலக்கம் : - .........................

12.E- mail : - .................................................................

13.கோரப்படும் அடிப்படைத் தகைமைகள் : - ..............................................................

..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதிப்படுத்துவதுடன், கீழ்க்காணும் விடயங்களுக்கும் இணங்கியே இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்றேன் என உறுதிப்படுத்துகின்றேன்.

- நாட்டின் எந்தவொரு கிளைக் காரியாலயத்திலும் சேவையாற்றச் சம்மதிக்கின்றேன்.
- பதவிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னர் , பணிபுரியும் இடத்தை நிர்ணயிப்பது பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின்படியே இடம்பெறும் என்பதை நான் நன்கு அறிவேன் என்பதுடன், அதற்கமைய வழங்கப்படும் சேவை நிலையங்களுக்கு எனது இணக்கத்தை இதன்மூலம் வெளிப்படுத்துகின்றேன்.

……………………………………… ………………………………………

திகதி ஒப்பம்

தே.அ.அ. இலக்கம் : - ................................................

பெயர் : - ..................................................................

- விண்ணப்பதாரர்கள் தங்களது கல்வி மற்றும் தொழில் தகைமைகளைக் குறிக்கும் சான்றிதழ்களின் நிழற்பிரதிகள் , பிறப்புச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டையின் பிரதி ஆகியவற்றை உண்மைப் பிரதிகள் எனத் தாங்களாகவே உறுதிப்படுத்தி 2026-09-19ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரில் கொண்டுவந்தோ பிரதான தவிசாளரிடம் ஒப்படைக்க வேண்டும் . ( விண்ணப்பத்தை உள்ளடக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைத் தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்)
- விண்ணப்பதாரர்கள் சங்கத்தின் எந்தவொரு கிளை அலுவலகத்திலும் பணியாற்றத் தேவையான உடல் மற்றும் உளத் தகுதியுடையவராக இருக்க வேண்டும் என்பதோடு , நாடு முழுவதும் உள்ள சங்கத்திற்கு சொந்தமான எந்தவொரு கிளை அலுவலகத்திலும் பணியாற்ற விருப்பமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் . தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின்படி வெற்றிடங்கள் உள்ள அலுவலகங்களுக்கு நியமனங்கள் செய்யப்படும் என்பதால் , விண்ணப்பதாரர்கள் இதற்குச் சம்மதிக்க வேண்டும்.
- வேறு ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் சேவையாற்றும் நபர் ஒருவர் விண்ணப்பத்தை அனுப்பும்போது, அவர் தான் சேவையாற்றும் கூட்டுறவுச் சங்கத்தின் ஊடாகவே அதனைச் சமர்ப்பிக்க வேண்டும் . கூட்டுறவுச் சங்கத்தில் சேவையாற்றும் எவரேனும் ஒருவர் நேரடியாக விண்ணப்பத்தை அனுப்பியுள்ளார் என்பது , அவர்/அவள் தெரிவு செய்யப்பட்ட பின்னராவது தெரியவந்தால் , அது பதவியை இழப்பதற்குக் காரணமாக அமையும்.
- மேலே குறிப்பிடப்பட்டவாறு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது சங்கத்தின் பிரதான தவிசாளருக்குக் கிடைக்கக்கூடிய வகையிலோ விண்ணப்பங்களை அனுப்புவது கட்டாயமானதாகும் என்பதுடன் , அவ்வாறான அனைத்து விண்ணப்பதாரர்களும் இந்த விளம்பரத்தில் காட்டப்பட்டுள்ள QR குறியீட்டைப் பயன்படுத்தி நிகழ்நிலை (Online) முறையிலும் விண்ணப்பித்திருக்க வேண்டும் . (QR குறியீட்டைப் பயன்படுத்தி நிகழ்நிலை முறையில் மாத்திரம் விண்ணப்பிப்பது போதுமானதல்ல.)

- கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுவின் கூட்டுறவு ஊழியர்கள் தாபன விதிக்கோவை மற்றும் 2025/03, 2025/04 ஆகிய சுற்றறிக்கைகளுக்கு அமைவாக இந்த ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்படும்.

- நேர்முகப் பரீட்சை மூலம் தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்பதுடன் , பணிப்பாளர் சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.


பிரதான தலைவர்
வரையறுக்கப்பட்ட கல்விச் சேவை ஊழியர்களின் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் வழங்கும் சங்கம்,
இல. 294, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி இலக்கம்:- 011-2 266 000